**நாள் 13.03.2023**

**OS 147/2019 வா.சா1 சகாயராணி மீண்டும் அழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

என்னுடைய மூத்த சகோதரி முதல் பிரதிவாதிக்கு வழக்கு சொத்து விவரங்கள் நன்கு தெரியும். 1992 ஆம் ஆண்டு என் அப்பா எவ்வளவு சம்பளம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. என் தாயார் பெந்தக பத்திரம் எழுதிகொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் என் அம்மா பெந்தக பத்திரம் எழுதிதரவில்லை. 1992 ம் வருடம் என் அம்மா வீட்டுக்குடித்தனம் தான். 2 ம் பிரதிவாதி வில்சன் வெளிநாட்டில் வேலை பார்த்தார். 2ம் பிரதிவாதிதான் தாவா சொத்து சம்பந்தமாக வாங்கிய கடனை அடைத்தார் என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதி வெளிநாட்டில்இருந்து வந்து வழக்கு சொத்தில் குடியிருந்தார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு 2000 ம் ஆண்டில் திருமணம் ஆனது. 2 ம் பிரதிவாதி 2003 ம் ஆண்டு வெளிநாட்டில் இருந்து வந்தார். அதற்கும் 2 வருடங்களுக்கு முன்பு இந்தியாவில்தான் இருந்தார். அதன்பிறகு என் அப்பா மீண்டும் வெளிநாட்டிற்கு அனுப்பினார். அந்த 2 வருடங்களுக்கு முன்பு வெளிநாட்டில்தான் வேலைபார்த்தார். தாவா சொத்தில் உள்ள வீட்டை கட்டியது 2 ம் பிரதிவாதியின் பணத்தில்தான் என்றால் சரியல்ல. நான் 3 ம் பிரதிவாதியுன் சேர்ந்து கொண்டு பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நிலத்தை விற்றும் வங்கியில் கடன் வாங்கியும் வழக்கு சொத்தை என் அம்மா கிரயம் பெற்றார். நிலத்தை விற்றதற்கும் வங்கியில் கடன் வாங்கியதற்கும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணம் தாக்கல் செய்கிறேன். வழக்கில் கோரியபடி பாகம் கிடைக்க எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/-) அ. மலர்விழி,

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.